வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 106/2021
வழக்குசாட்சி LW11/PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத், காவல் ஆய்வாளர், செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வேம்புளி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 10.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2019 எம்1 மாதவரம் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணியில் இருந்த போது 30.11.2019 அன்று காலை 10 மணிக்கு நிலையம் ஆஜராகி திருமதி. கல்பனா என்பவர் அளித்த புகாரினைப் பெற்று எம்1 மாதவரம் காவல் நிலைய குற்ற எண் 715/2019, சட்டப்பிரிவு 304(A) ன் கீழ் வழக்கு பதிவுச் செய்தேன். முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி வழக்கின் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு கண்ணுற்ற சாட்சிகள் பாலமுருகன், பூபதி, செல்வராஜ் ஆகியோரை விசாரித்து தனித்தனியே

வாக்குமூலம் பதிவுச் செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சௌந்தரபாண்டியன், ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவற்றை தயார் செய்தேன். மேற்படி மாதிரி வரைபடம், பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 3, 4 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் இறந்த நபரின் பிரேத்த்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் 30.11.2019 அன்று காலை 11.30 முதல் 1 மணி வரை பிரேத விசாரணை முடித்து பிரேத்த்தை பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டேன்லி மருத்துவமனைக்கு தலைமை காவலர் செல்வராஜ் மூலம் வேண்டுகோள் விடுத்தேன். பின்னர் பிரேதத்தை அவரது மனைவி அடையாளம் காண்பித்து அரசு ஸ்டேன்லி மருத்துவமனை மருத்துவர் பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை அளித்தார். அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி விக்னேஷ்குமார் என்பவரை ஆந்திரா பஸ் நிலையம் அருகில் அதே தேதியில் பிற்பகல் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் பிரேதத்தை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை பெற்றேன். அந்த தடயவியல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் விசாரணை முடித்து 22.01.2021 ல் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

இறந்த நபர், ஆஜர் எதிரி, கண்ணுற்ற சாட்சி அனைவரும் ஏசி மெக்கானிக் வேலை செய்து வருபவர்கள் என்றால் ஆமாம். மூவரும் தினக்கூலி நபர்கள் என்றால் இறந்த நபரும், கண்ணுற்ற சாட்சியும் ஆஜர் எதிரி எடுத்த சப் காண்டிராக்ட் வேலையில் வேலை செய்த நபர்கள் ஆவர். மேற்படி எதிரி எடுத்த காண்டிராக்ட் ஒப்பந்த நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மூவரும்

New brushing Point கம்பெனியில் தினக்கூலியாக வேலைக்கு செல்பவர்கள் என்றால் ஆமாம். ஆனால் சம்பவ வேலையானது எதிரியால் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. யாரிடம் இருந்து எதிரி சப் காண்டிராக்ட் எடுத்தார் என்றால் OYA நிறுவனத்திடம் இருந்து சப் காண்டிராக்ட் எடுத்திருந்தார். நிறுவனத்திடம் வேலைக்கு செல்லும் போது அவர்களுடைய பாதுகாப்பினை யார் உறுதிசெய்வார்கள் என்றால் சப் காண்டிராக்ட் எடுத்து செய்யும் நபர்களே. எதிரி சப் காண்டிராக்ட் ஏதும் எடுக்கவில்லை என்றாலும் New brushing Point கம்பெனியில் அனைவரும் தினக்கூலிக்கு சென்ற நபர்கள் என்றால் சரியல்ல. அவர்களது பாதுகாப்பினை New brushing Point கம்பெனி தான் உறுதிச் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. சாட்சி பூபதி New brushing Point கம்பெனியில் தான் நாங்கள் வேலைக்குச் சென்றோம் என வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று விசாரணைச் செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கினை பதிவுச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.